சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி.

முன்னிலை-திருமதி.**M.அகிலாதேவி, எம்.எல்.,**

சார்பு நீதிபதி, கோவில்பட்டி.

2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம்நாள், வியாழக்கிழமை.

**அ.வ.எண்.87/2018**

1)மைனர் ஜாஸ்பர் புவல்ராஜ்
2)மைனர் ஜெனிபர் ஸ்வீடலின்
(வாதிகள் அவர்களது தாயாரும் இயற்கைப்
பாதுகாவலருமான திருமதி.ஜான்ஸிராணி மூலம். ..வாதிகள்..

/எதிர்/

1) மாரீஸ் வேலழகன் என்ற ஜான்சன் சாமூவேல்
2) ராஜகனி அம்மாள்
3) முத்துகிருஷ்ணன்
4) சுதர்கனாதேவி
5) பாப்பாத்தி. ...பிரதிவாதிகள்...

இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. இளங்கோ அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. மாரீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், வாதி தரப்பில் (Settled out of Court) வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்துபோய்விட்டதென கூறி தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை பதிவுசெய்ததின் அடிப்படையில் இவ்வழக்கில் வழங்கும்,

**தீர்ப்புரை**

வாதி, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 7 விதி-1ன்கீழ் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 15-ல் 2 பங்கு சொத்துக்களை நயமீதம் பார்த்து பிரித்து வாதிகளுக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும் வகையில் பிரதிவாதிகளுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும், தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கும், வாதிகளுக்கும் பாத்தியமுள்ள 5-ல் 1 பங்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி எந்த வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிவித்தும், இந்த வியாச்சிய செலவு வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும், கேட்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)இவ்வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தது. வாதி தரப்பில் (Settled out of Court) வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்து போய்விட்டதென கூறி

குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அதை பதிவுசெய்ததின் அடிப்படையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. வாதி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணத் தொகையில் 78(2)-(Court fee Act)-ன்படி கழிவு போக மீதி தொகையை வாதிக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது.

2019ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 07ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)M.அகிலாதேவி.
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

வாதிகள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள் - இல்லை.
பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள் - இல்லை.

(ஒம்)M.அகிலாதேவி.
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிமன்றம்,
கோவில்பட்டி.
அ.வ.எண்.87/2018
தீர்ப்புரை
நாள்.07.11.2019.

சார்பு நீதிமன்றம்,கோவில்பட்டி.

முன்னிலை-திருமதி.**M.அகிலாதேவி, எம்.எல்.,**

சார்பு நீதிபதி, கோவில்பட்டி.

2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம்நாள், வியாழக்கிழமை.

**அ.வ.எண்.87/2018**

1) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் கிராமம், சுனாமி நகர் கதவு எண்.3/175-ல் வசித்து வரும் 1ம் பிரதிவாதி மாரீஸ் வேலழகன் குமாரர் வயது 11 உள்ள மைனர் ஜாஸ்பர் பவுல்ராஜ்.

2) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் கிராமம், சுனாமி நகர் கதவு எண்.3/175-ல் வசித்து வரும் 1ம் பிரதிவாதி மாரீஸ் வேலழகன் குமாரர் வயது 7 உள்ள மைனர் ஜெனிபர் ஸ்வீடலின்.

(மைனர் வாதிகள் இருவரும் அவர்களது தாயாரும் இயற்கை பாதுகாவலருமான 1ம் பிரதிவாதியின் மனைவி வயது 38 உள்ள திருமதி.ஜான்ஸி ராணி மூலம்)

...வாதிகள்....

/எதிர்/

1) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் தெற்கு ஊராட்சிக்குள்பட்ட பச்சையாபுரம் கிராம வடக்குத்தெரு, கதவு எண்.3/22-ல் வசித்து வரும் அமரர் அருணாசலம் நாடார் குமாரர் சுமார் 44 வயதுள்ள மாரிஸ்வேல்அழகன் என்ற ஜான்சன் சாமுவேல்.

2) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் தெற்கு ஊராட்சிக்குள்பட்ட பச்சையாபுரம் கிராம வடக்குத்தெரு, கதவு எண்.3/22-ல் வசித்து வரும் அமரர் அருணாசலம் நாடார் மனைவி சுமார் 68 வயதுள்ள ராஜகனி அம்மாள்.

3) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் தெற்கு ஊராட்சிக்குள்பட்ட பச்சையாபுரம் கிராம வடக்குத்தெரு, கதவு எண்.3/22-ல் வசித்து வரும் அமரர் அருணாசலம் நாடார் குமாரர் சுமார் 42 வயதுள்ள முத்துகிருஷ்ணன்.

4) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், காஞ்சிபுரம் டவுண், பாக்ராம்பேட்டைதெரு, கதவு எண்.32B-ல் வசித்து வரும் அமரர் அருணாசல நாடார் மகளும் முருகேசபாண்டியன் மனைவியும் ஆன சுமார் 48 வயதுள்ள சுதர்கனாதேவி.

5) பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம், பாண்டிச்சேரி டவுண், நெல்லித்தோப்பு பகுதி, பெரியார்நகர் 7வது குறுக்குத்தெருவில் கதவு எண்.5-ல் குடியிருந்து வரும் அமரர் அருணாசல நாடாரின் மகளும் பாலகிருஷ்ணன் மனைவியும் ஆன சுமார் 46 வயதுள்ள பாப்பாத்தி. ...பிரதிவாதிகள்...

வாதி, உரிமையியல் நடைமுறைச்சட்டம் வகுமுறை 7 விதி-1ன்கீழ் தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய 15-ல் 2 பங்கு சொத்துக்களை நயமீதம் பார்த்து பிரித்து வாதிகளுக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும் வகையில் பிரதிவாதிகளுக்கு எதிராக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கும்படிக்கும்,

*தபசில் சொத்துக்களில் 1ம் பிரதிவாதிக்கும், வாதிகளுக்கும் பாத்தியமுள்ள 5-ல் 1 பங்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி எந்த வகையிலும் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தை 1ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிவித்தும், இந்த வியாச்சிய செலவு வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும்படிக்கும், கேட்டு வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நாள் - 27.04.2018, 25.06.2018.*

*வழக்குமூலம்- 12.09.13, 20.09.07, 05.11.11, 22.04.18, 2014 ஏப்ரல் மாதம் முதலும், 2015 ஏப்ரல் தொடக்க முதலும் ஆகிய தேதிகளில் விளாத்திகுளம் தாலுகா, வேம்பார் கிராமம் மற்றும் சூரங்குடி கிராமத்தில் வைத்து உற்பத்தி.*

*அதிகார வரம்பின் மதிப்பு - ரூ.45,90,000/- அதில் வாதிகளின் பங்கு ரூ.6,12,000/- + ரூ.1000/-*

*நீதிமன்றக்கட்டணம்- அ) பரிகாரத்தை ரூ.45,90,500/- ஆக மதித்து அதில் வாதிகளின் பங்கான 15-ல் 2பங்கினை ரூ.6,12,000/- ஆக மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 37(2)-ன்படி ரூ.5,000/-ம்,*

*ஆ) பரிகாரத்தை ரூ.1000/- ஆக மதித்து அதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கடடணச் சட்டம் பிரிவு 27(C)-ன்படி ரூ.30/-ம் ஆக மொத்தம் ரூ.5,030/-க்கு இத்துடன் நீதிமன்ற முத்திரைக்கட்டணம் செலுத்தப் பட்டுள்ளது.*

*இந்த வழக்கு இன்று விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*A. *இளங்கோ அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.*S. *மாரீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், வாதி தரப்பில்* (Settled out of Court) *வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே பேசி தீர்ந்துபோய்விட்டதென கூறி தாக்கல் செய்யப்பட்ட குறிப்பாணை பதிவுசெய்ததின் அடிப்படையில் இவ்வழக்கில் வழங்கும்,*

## தீர்ப்பாணை.

1) வழக்கு நீதிமன்றத்திற்கு வெளியே தீர்ந்துவிட்டபடியால் தள்ளுபடி செய்யப்பட்டு இதன்மூலம் உத்தரவிடப் படுகிறது.

2) வாதி செலுத்தியுள்ள நீதிமன்றமுத்திரை கட்டணத் தொகை ரூ.5,030/-ல் 78(2)-(Court fee Act)-ன்படி கழிவு போக மீதி தொகையை வாதிக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்படுகிறது.

### 1ம் தபசில்

துாத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் கிராம மாலில் அமைந்துள்ள புஞ்சை நிலங்கள் விபரம்.

| வ.எண். | புல எண். | விஸ்தீரணம் ஹெறக்டேர் | பட்டா எண். |
|---|---|---|---|
| 1) | 112/2A2A | 01.89.97 | 839 |
| 2) | 110 | 04.73.50 | 432 |
| 3) | 81 | 02.56.00 | 223 |
| 4) | 103/6A | 0.0.50 | 4 |
| 5) | 103/6B | 0.0.50 | 4 |
| 6) | 101/8A | 0.02.00 | 24 |
| 7) | 101/8B | 0.17.50 | 24 |
| 8) | 101/9 | 0.33.00 | 24 |
| 9) | 103/3A | 0.79.00 | 24 |
| 10) | 103/3B | 0.01.50 | 24 |
| 11) | 112/1 | 0.04.00 | 24 |
| 12) | 112/2C | 0.01.00 | 24 |
| 13) | 28/2A | 2,27.50 | 938 |
| | மொத்தம் | 13.05.97 | |

மதிப்பு ரூ.30,00,000/-

### 2ம் தபசில்

1) துாத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், வேம்பார் கிராம மாலில் புல எண்.112/2B-ல் (பட்டா எண்.24) உள்ள 4 ஏர்ஸ்-க்கு சுமார் 10 செண்ட் அளவுள்ள வீட்டுமனையில் அமையபெற்றுள்ள கதவு எண்.3.175-3 கொண்ட வீடு மற்றும் கதவு எண்.3/175-5 கொண்ட கடை மதிப்பு ரூ.9,00,000/-

2) துாத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், வேம்பார் ஊராட்சிக்குட்பட்ட பச்சயபுரம் கிராமத்தில் வடக்குத்தெருவில் கதவு எண்.3/22

கொண்ட ஓட்டு வீடு. மதிப்பு ரூ.6,00,000/-

**3ம் தபசில்**

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், தூத்துக்குடி கிராம மாலில் அமைந்துள்ள பட்டா எண்.30, புல எண்.272/2B-ல் உள்ள 11.50 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள புஞ்சை நிலம். மதிப்பு ரூ.90,000/-

1ம் தபசில் மதிப்பு ரூ.30,00,000/-
2ம் தபசில் மதிப்பு ரூ.15,00,000/-
3ம் தபசில் மதிப்பு ரூ. 90,000/-
--------------------
ரூ.45,90,000/-
--------------------

வாதிகளின் 15-ல் 2 பங்கு ரூ.6,12,000/-

2019ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 07ஆம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்)M.அகிலாதேவி.
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிபதி
கோவில்பட்டி
அ.வ.எண்.87/2018
தீர்ப்பாணை
நாள்.07.11.2019.